

காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியத்தில், அ.தி.மு.க., மற்றும் பா.ம.க., கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சாத்தனஞ்சேரி ஊராட்சியில் சுரேஷ் தலைமையில் 25க்கும் மேற்பட்டோர், ஆனம்பாக்கம் கிராமத்தில் பன்னீர்செல்வம் மற்றும் செல்வம் ஆகியோர் தலைமையில் 30க்கும் மேற்பட்டோர், அ.தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகிய கட்சிகளிலிருந்து விலகி காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய கழக செயலாளர் டி.குமார், கலைசெல்வி கோதண்டராமன், கோமளா ஐயப்பன், எட்டியப்பன், வீரமணி, வீரபாண்டி, சு.முரளிதரன், வெங்கட்ராமன், அழகப்பன், தர்மராஜ், செ.விஷ்ணு, வீ.பழனி, நாகராஜன், மணிகண்டன், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த

# சிறுமியின் குடும்பத்திற்கு ரூ.3லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 13-

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்திலுள்ள ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியினையும் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், அரசம்பட்டு கிராமம், மூப்பனார் தெருவில் வசிக்கும் பன்னீர்செல்வம் என்பவரின் மகள் செல்வி. சௌமியா (வயது 14) என்பவர் 10.10.2025 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் பூட்டை கிராம எல்லையில் இருக்கும் ஆற்றில் துணி துவைத்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக வலிப்பு ஏற்பட்டு ஆற்று நீரில் மூழ்கி உயிரிழுந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

### குழந்தைகள் உயிரைப் பறித்த

# இருமல் மருந்து தயாரிப்பு நிறுவனத்தை மூட நடவடிக்கை!

## நெல்லையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

நெல்லை.அக்.13.

குழந்தைகளின் உயிரைப் பறித்த இருமல் மருந்து விவகாரத்தில் அந்த மருந்து தயாரிப்பு நிறுவனத்தை மூடுவதற்கும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளவும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் பதில் எதுவாக இருந்தாலும்,சட்டப்படி உரிமத்தை ரத்து செய்து, நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.என நெல்லையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நெல்லையில் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.



நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி தொடங்கப்பட்டு 60 ஆண்டுகள் ஆன நிலையில் மருத்துவமனை நிர்வாகம் சார்பில் வைர விழா கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஆகியோர் பங்கேற்று குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவைத் துவக்கி வைத்தனர். தொடர்ந்து 1 கோடி ரூபாய் மதிப்பிட்டில் நாங்குநேரி மற்றும் சேரன்மகாதேவி பகுதியில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார நிலையத்தை திறந்து வைத்தனர். இதனை அடுத்து நிகழ்வில் வைரவிழா புத்தகத்தை சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு வெளியிட அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் செய்தியாளர் களிடம் பேட்டியின் போது தெரிவித்த தாவது.

மத்தியப் பிரதேச மாநிலம்,சிந்துவாரா மாவட்டத்தில் குழந்தைகள் மரணத்திற்கு தொடர்புடையதாகக் கருதப்படும் 'கோல்ட்ரிப்' இருமல் மருந்து குறித்து, ஒன்றிய அரசிடமிருந்து கடந்த 1ம் தேதி எங்களுக்கு அவசர கடிதம் கிடைத்தது.

கடிதம் கிடைத்த உடனேயே,அந்த மருந்தின் விற்பனைக்கு தடை விதித்தோம்.தமிழ்நாடு அரசு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் அந்த மருந்து கொள்முதல் செய்யப்படவில்லை என்றாலும்,தனியார் விற்பனைக்கும் உடனடியாகத் தடை விதிக்கப் பட்டது. கடந்த 3ம் தேதி, அந்த நிறுவனத்திற்கு 'உற்பத்தியை நிறுத்துமாறு உத்தரவு வழங்கப்பட்டது.அத்துடன், "விஷத்தன்மை வாய்ந்த மருந்தை தயாரித்ததற்காக உங்கள் நிறுவனத்தை ஏன் மூடக் கூடாது?" எனக் கேட்டு நோட்டீஸும் வழங்கப் பட்டுஉள்ளது.

அதன் தொடர்ச்சியாக (7ம் தேதி), அன்று "உங்கள் மீது ஏன் கிரிமினல் நடவடிக்கை எடுக்கக்கூடாது?" என்று கேட்டு மற்றொரு நோட்டீஸும் வழங்கப் பட்டுள்ளது.அந்த நிறுவனத்தின் பதில் எதுவாக இருந்தாலும்,சட்டப்படி உரிமத்தை ரத்து செய்து, நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்குரிய அனைத்து நடவடிக்கை களையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த மருந்தில்,டை எத்திலீன் கிளைக்கால் என்ற நச்சு ரசாயனம் ஒரு சதவீதம் கூட இருக்கக் கூடாது.ஆனால்,48 சதவீதம் வரை கலந்திருப்பது பெரும் குற்றம். இதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது கிரிமினல் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.நாங்கள் 48 மணி நேரத்தில் துரிதமாகச் செயல்பட்டு, புதுச்சேரி, ஒடிசா போன்ற மாநிலங்களையும் எச்சரித்ததால்,அங்கு பாதிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்பு அதிகமாக இருப்பதாகக் கூறப்படுவது சரியல்ல. இந்த ஆண்டு இது வரை சுமார் 15,000 பேர் பாதிக்கப்பட்டு,8 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்புகள் பெரும்பாலும், டெங்குவுடன் இதர இணை நோய்கள் இருப்பதாலேயே நிகழ்கின்றன.2012 மற்றும் 2017ம் ஆண்டுகளில் ஆண்டுக்கு 65க்கும் மேற்பட்ட இறப்புகள் நிகழ்ந்தன. ஆனால் முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலோடு எடுக்கப்பட்ட முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளால், கடந்த 5 ஆண்டுகளாக இறப்புகளும், பாதிப்புகளும் பெருமளவில் குறைக்கப் பட்டுள்ளன.

தென்காசி,மயிலாடுதுறை,காஞ்சிபுரம், திருப்பத்தூர்,ராணிப்பேட்டை, பெரம்பலூர் ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்க கடந்த 4 ஆண்டுகளாக ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடமும், நான் ஒன்றிய அமைச்சரிடமும் நேரடியாகக் கோரிக்கை வைத்துள்ளோம். பரிசீலிப்ப தாகக் கூறியுள்ளனர், பதிலுக்காகக் காத்திருக்கிறோம். நெல்லை அரசு மருத்துவமனையில் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைக்கு வசதியில்லை என்பது போன்ற தகவல்கள் தவறு.புற்றுநோய் கண்டறியும் 'பெட்சிடி' கருவி உட்பட பல நவீன உபகரணங்கள் இங்கு நிறுவப் பட்டுள்ளன. எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைக் கான சிறப்பு மருத்துவர்களை நியமித்து, அந்த வசதியும் மிக விரைவில் இங்கு நடைமுறைப்படுத்தப்படும்.இந்த மருத்துவக் கல்லூரியில் மட்டும் தற்போது 80 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அப்போது நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ.கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட்புரூஸ்,நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபிமனோகரன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜூ, உள்பட பலர் இருந்தனர்.




செங்கல்பட்டு மாவட்டம் மேலைகோட்டையூரில் அமைந்துள்ள மாற்றுதிறளாகிகள் பல்கலைக்கழக கழகத்தின் சார்பில் மாநில அளவிலான பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான கைபந்து மற்றும் இறகுப்பந்து விளையாட்டு போட்டிகளை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ அவர்கள் கலந்துகொண்டு துவக்கி வைத்தும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு முதல்வரின் பெயரில் வெற்றி கோப்பை விருது பரிசுகளை வழங்கி பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்வில் மண்டல முதுநிலை மேலாளர் சிவா, மண்டல மேலாளர் ரமேஷ், மாவட்ட விளையாட்டு அலுவலர் அ.ஆனந்த் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருமுடிவாக்கம் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' நிகழ்ச்சியை குன்றத்தூர் ஒன்றிய கழக பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் ஏ.மணி முன்னிலை வகித்தார். இதில் லட்சாவதி கருணாகரன், வைத்தியலிங்கம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.





திருவாரூரில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சிறுபான்மை இன மக்களின் 'காப்பான் தி.மு.க.' எனும் மாபெரும் கருத்தரங்கத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசினார். பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி, மாநில செயலாளர் அ.சுபேர்கான், எம்.ஐ.ஆர்.தாஜுதீன் மற்றும் தஞ்சை ,நாகை மாவட்ட சிறுபான்மைப்பிரிவு நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - அ.சுபேர்கான் பங்கேற்பு

# சிறுபான்மை மக்களின் 'காப்பான் தி.மு.க.' - திருவாரூரில் கருத்தரங்கம்!

## நவாஸ்கனி எம்.பி.- பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவாரூர்,அக்13-

அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன், நவாஸ்கனி எம்.பி. சிறப்புரையில் அணியின் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

திருவாரூரில் (அக்.11) தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ்.ஆர்த்தோ தலைமையில் "அன்றும்! இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க.," எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், திருவாரூர் மாவட்ட கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மற்றும் தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

விழாவில் தொடக்கவுரையாற்றிய அணியின் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான், சிறுபான்மையின மக்களுக்கும் தி.மு.க-விற்குமான தொடர்பு; கழகம் தோன்றியது முதலானது என பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் முதன்முதலில் சந்தித்த மிலாடிநபி விழாவினை நினைவு கூர்ந்தார்.

அதேபோல், சிறு பான்மையின மக்களுக்கு அரணாக விளங்கும் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கின்ற போதெல்லாம் செய்து வரும் எண்ணற்ற சாதனைகளை, திட்டங்களை ஒவ்வொரு சிறுபான்மையினரிடத்திலும் கொண்டு செல்ல வேண்டியது நமது தலையாய கடமை என்றார்.

ஒன்றியத்தில் இருக்கின்ற பாசிச பாஜக அரசு சிறுபான்மையின மக்களை தொடர்ந்து வஞ்சித்து வருவதோடு, அம்மக்களின் உரிமைகளை நசுக்குகின்ற வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருவதையும், நம் மானமிகு தமிழ் மண்ணில் இருந்துகொண்டு, சுயமரியாதையை முற்றிலும் இழந்து அடிமைகளாக அதிமுக இருப்பது வெட்கக்கேடு; இவர்களுக்கு 2026 தேர்தல் களத்தில் தோல்வியை பரிசளிக்க அனைவரும் தயாராவோம்.

அன்றும், இன்றும், என்றும் சிறுபான்மையின மக்களின் காப்பானாக விளங்கும் தி.மு.க-விற்கும், இமைப்பொழுதும் சிறுபான்மையின மக்களின் நலனுக்காக உழைத்திடும் முதலமைச்சர் கழகத் தலைவரின் கரங்களுக்கு வலு சேர்ப்போம்! என்றார்.

மேலும், மாவட்ட கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் பேசுகையில், இந்து அல்லதோரை எவ்வாறு கோவில் நிர்வாகத்தில் இணைக்க இயலாதோ, அதேபோல் இஸ்லாமியர்கள் அல்லாத ஒருவரை எவ்வாறு வக்பு நிர்வாகத்தில் இடம்பெறச் செய்ய இயலும் என்ற கேள்வி எழுப்பியதுடன், நம் ஒற்றுமையை சீர்க்குலைக்க ஆளும் ஒன்றிய பா.ஜ.க., அரசின் சதித் திட்டம் எனவும் கூறினார்.

தொடர்ந்து பேசிய நவாஸ்கனி எம்.பி. அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் பழமையான பள்ளிவாசல்களின் புனரமைப்புக்கு இதுவரை 45 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையில், நான்காரை ஆண்டுகளில் சிறுபான்மையின மக்களான இஸ்லாமியார், கிறிஸ்துவர், ஜெயிணம், சமணம் மற்றும் புத்தம் முதலிய சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்திற்காக கழக அரசு இயற்றியுள்ள சாதனைகளை பட்டியலிட்டார்.

மேலும், வக்பு திருத்தச் சட்டம் அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே அதை எதிர்த்து சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றியவர் நம் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தான் எனக் கூறியதுடன், வக்பு திருத்தச் சட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள சட்டப் போராட்டங்களை விளக்கி பேசினார்.

இந்நிகழ்வில், சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில துணைத்தலைவர் ஜோசப் ராஜ், மாநில இணைச் செயலாளர் ஜெரால்டு, மாநில துணைச் செயலாளர்கள் அன்வர் கான், விஜயகுமார், முனவர் ஜான், நூருல்லா, ராபர்ட் இராஜதுரை மற்றும் திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் தாஜிதீன், தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் பாவை அனீபா, தஞ்சை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ஷாகுல் அமீது, மயிலாடுதுறை மாவட்ட அமைப்பாளர் சம்சுதீன், மாவட்ட துணைத்தலைவர் முகமது ஜின்னா, நாகப்பட்டினம் மாவட்ட அமைப்பாளர் கே.எஸ்.ஷாகுல் அமீது மற்றும் திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும், சிறுபான்மையின அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்று சிறப்பித்தனர்.

### பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

# காஞ்சிபுரத்தில் புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து சேவை!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், அக். 13-

காஞ்சிபுரம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான காஞ்சிபுரத்தில் நகரப் பேருந்து சேவையை கொண்டுவர வேண்டுமென்பதை வலியுறுத்தி, தி.மு.கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், கடந்த 09.09.2025 அன்று காஞ்சிபுரத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், ஆய்வுக்காக வருகைத் தந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையின் படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் உத்தரவுபடி, நேற்று (11.10.2025) காலை 09.30 மணியளவில், காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து, 1) அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காரப்பேட்டை - இரயில் நிலையம் - டோல்கேட் - பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வரையில் ஒரு பேருந்து சேவையும்; 2) ஒலிமுகமது பேட்டை - மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செவிலிமேடு வரை யிலும் என இரண்டு வழித்தடங்களில் செல்லும் புதிய நகரப் பேருந்து சேவையை சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், 2வது மண்டலக் குழு தலைவர் எஸ்.சந்துரு, ஒன்றியச் செயலாளர் பி. எம்.குமார், பகுதிக் கழக செயலாளர்கள் கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், தொ.மு.ச. நிர்வாகிகளான சுதாகர், டில்லி, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கோட்ட மேலாளர் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.





பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி திமுக சார்பாக பாக முகவர்கள் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு வாக்காளர்கள் பட்டியல் சரிபார்த்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார் அப்பொழுது பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ. ஜோசப் அண்ணாதுரை தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் பகுதி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.